Written by - ர.சுரேஷ், உதவிப்பேராசிரியர், கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர் -
Friday, 06 September 2019 07:01 - Last Updated Friday, 06 September 2019 07:08

□□□□□ □□□□□□□ □□□□□□□□

திருஞானசம்பந்தர் பாடல்களில் சிவன் மார்க்கண்டேயரைப் பிடிக்க வந்த காலனை, உதைத்த தொன்மம் மிகுதியான இடங்களில் வருகிறது.

“காலற் சுறெற்ற மறையவன்”[1]

“காலன் தன்னை ஓல்க உதைத்தருளி”[2]

“காலன் தறில் அறச் சாடிய கடவுள்”3
“காலன் மடியவே”[4]

“கூற்றமுதைத்த கூழகன்”5
“கூற்றுதை செய்த”[6]

பேன்றவை முதல்திருமுறையில் இடம்பெற்ற காலனை உதைத்த தொன்மக் கூறிப்புகளில் சிலவாகும். இவை ஏன் திருஞானசம்பந்தரால் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன என்பதை ஆராய்ந்து பார்த்தால் சில விளக்கங்களைப் பெறமுடியும்.

வடமொழியில் யமன் என்றும் தமிழகத்தில் கூற்றுவன் என்றும் கூறப்படும் தெய்வமே தொல்பழம் சமயத் தெய்வங்களில் ஒன்றாகச் சுடலை மாடன் என்ற பெயரில் வணங்கப்பட்டது. மக்களின் சமய வாழ்வின் தொடக்கம் மரணத்தைப் பற்றிய அச்சம் அதன் பிறகான வாழ்வு பற்றிய சிந்தனையை அடியொற்றியே இருந்திருக்க வேண்டும். தமிழகத்தைப் பொருத்தவரையில் நடுகல் வணக்கம் எனப்படும் நீத்தார் வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்து வந்துள்ளது. அதனதை் தொடர்ந்து தமிழ்மக்கள் கூற்றுவனைக் கடவுளாக, வணக்கத்திற்குரியவனாகப் போற்றியிருக்கின்றனர்.

சுடுகாட்டுப் பகுதிகளில் மிகுதியாகக் காணப்படும் களிநிழலில் அமர்ந்துள்ள ஓரு கடவுள் பற்றிய குறிப்பு புறநானூற்றில் காணப்படுகிறது (புறம்.260). இது சுடலை மாடனைக் குறிப்பதாக இருக்கலாம்[7] என்ற க. கோதண்டராமன் கூறுவார்.

சுடலைமாடன் வழிபாடு தமிழ் நாட்டின் தனைமாவட்டங்களில் இன்றும் தொடர்கிறது. இத்தெய்வத்தின் கோயிலைச் சுற்றிய பகுதிகளில் ஆலமரம் காணப்படும் நிலையை

நாஞ்சில் நாட்டில் பரவலாகக் காணமுடிகிறது என்று அ.கா.பெருமாள் கூறுகிறார்.

மாடன் வழிபாட்டின் முக்கிய அம்சம், திருநாளின் போது சாமியாடி ஓருவர், மக்கள் பின் தொடர நள்ளிரவில் சுடுகாட்டுக்குச் சென்று அங்கு சாம்பலில் குளித்து, எலும்புகளை அணிந்துகொhண்டு, ஊருக்குள் திரும்பி வருவது என்று அவர் கூறுகிறார். சுடலை வாழ்வு, சாம்பல் பூச்சு, அழிக்கும் தொழில், கபாலம் ஏந்தி இருத்;தல், ஆலமரத்தடியமாதல் ஆகிய சிவனின் பண்புகள் சுடலை மாடனிடமிருந்து வந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

சுடலை மாடனின் உருவம் மலேசுகிச் சலெல்லும் ஓரு சவெவ்வகமும் அதன்மலே ஓரு அறைவட்டமுமாக இருப்பதிலிருந்து தான் சிவலிங்க வடிவம் தோன்றி இருக்க வேண்டும் என்ற அவரது கருத்து சரியாக இருக்கலாம்.

சிவன் வழிபாடு நிலத்தைத்தபின் சிவனுக்குரிய புராணக் கதைகள் சுடலைமாடனுக்கும் உரியதாக ஆக்கப்பட்டது என்று அவர் கூறுகிறார். (இவ்வாறு தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவிவந்த சுடலைமாடன் வழிபாட்டைச் சிவவழிபாடு பின்னுக்குத் தள்ளியிருக்க வேண்டும் என்பதை சு. கோதண்டராமன்,

“சோழ நாடாகிய தஞ்சை மாவட்டத்தில் மயானம் என்ற பயோ் பறெ்ற நான்கு கோயில்கள் உண்டு. அவை திருவிழிமிழலை, சீ ர்காழி, திருக்கடவூர், நாலூர் இவற்றுடன் வட தமிழகத்தில் உள்ள காஞ்சியையும் சோ்த்து ‘பஞ்ச மயானம்’’ என்பா். இந்த இடங்களில்தான் முதன்முதலாக யமன் வழிபாடு சிவன் வழிபாடாக மாற்றம் பறெ்றிருக்க வேண்டும் என்கிறார்[8] மலேும்,

திருக்கடவூரில் மார்க்கண்டயேனகை் காப்பதற்காகவும், திருவிழிமிழலையில் சுவதேகதேு என்னும் ராஜாக்காகவும், திருவயாற்றில் ஓதுதாலதி என்பவருக்காகவும், சிவன் யமனை சம்ஹாரம் சயெ்தார் என்ற புராணக் கதைகள் சிவவழிபாட்டின் முன் யமன் வழிபாடு தோற்றுப் போனதைக் கூறுவதாகவே இருக்கலாம் என்கிறார்.[9]

மலேும் தமிழகம் மற்றும் புதுவபை் பகுதிகளில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மாசிமகத் திருவிழா இறந்த முன்னோர்கள் அனைவருக்கும் சோ;த்து வழிபாடு நடத்தும் விதமாக அமைந்துள்ளது. இவ்விழா பிராமணா் அல்லாதாரிடையே வழக்கமாக இருந்து வருகிறது.

இவற்றையெல்லாம் நோக்க, தமிழகத்தில் நீ த்தார் வழிபாடும், சுடலைமாடன் வழிபாடும் சிறப்பாக நடபைறெ்று வந்திருக்கிறது என்பதை அறியலாம். பின்வந்த வதைீ க மதத்தால் சுடலைமாடன் பின்னுக்குத் தள்ளப்பட்டு சிவன் முதன்மை பறெுவதும் காணமுடிகிறது. கள்ளி நிழலில் இருந்த சுடலைமாடன் ஆலமா் சலெ்வனாக மாறிய நிலை சிந்துவளெி சிவ வழிபாட்டிலிருந்துத் தமிழா் பறெ்றுக் கொண்டதாகும். மலேும் இலக்கியச் சான்றாக,

“கணிச்சிக் கூர்ம்படை கடுந்திறல் ஓருவன்
பிணிக்கும் காலை இரங்கூவீ ர் மாதரே”[10]

என்பதிலிருந்து கணிச்சி எனும் மழு முதலில் கூற்றுவனின் ஆயுதமாக இருந்து இதுவே பின்னா் சிவனின் ஆயுதமாகி இருக்க வேண்டும்.

மறேக்கண்ட கருத்துக்கள் தமிழகத்தில் நிலவிவந்த சூடலமைாடன் என்னும் க□ற்றுவ வழிபாட்டை சிவ மதம் பின்னுக்குத் தள்ளிய வரலாற்றை உணர்த்தவல்லன. திருஞானசம்பந்தர், காலனை உதைத்த தொன்மத்தை மீ ண்டும் மீ ண்டும் எடுத்தாளக் காரணம் தமிழகத்தில் தொன்றுதொட்டு சலெ்வாக்குப் பறெ்றிருந்த க□ற்றுவ வழிபாட்டைப் பின்னுக்குத் தள்ளவே ஆகும். திருஞானசம்பந்தா் மாரக்கண்டயேன் வழிபட்டதைப் பற்றிக் க□றும்பொழுது,

“நன்றுகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்டி டொன்றி
வழிபாடு சயெலுற் றவன்”[11]

என்று மலா்களைக் கொண்டு இருக்கு வதேமந்திரங்களைக் கொண்டு துதித்ததாகக் க□றுகின்றாா். மலேும் பல இடங்களில் மாரக்கண்டயேனை அந்தணன் என்று பாே hற்றுகின்றாா். அந்தணனை மாயக்க வந்ததே சிவன் க□ற்றுவனை உதகை்கக் காரணம் என்று பாடுகிறாா். சிவனை முன்னிருத்தி அந்தணா்களின் வதைீ க வழிபாட்டசை் சிறப்பித்து அவ்வாறு துதிப்பவா்களைக் காலனும் அணுகமாட்டான். அணுகினால் சிவன் தடுத்தாட் கொள்வாா் எனும் கருத்ததை் திருஞானசம்பந்தா் இத்தொன்மத்தின் வாயிலாக வளிெப்படுத்துகிறாா். தமிழா் வழிபட்ட க□ற்றுவ வழிபாட்டைப் பின்னுக்குத் தள்ளி வதைீ கத்தை முதன்மைப்படுத்தும் கருத்தியலை இத்தொன்மத்தின் ம□லம் எடுத்துரைகை்கிறாா்.

சிவன் கரியின் தோலை உரித்தது பற்றிய தொன்மம்

சிவபரெுமான் யானயைை உரித்த கதை திருஞானசம்பந்தரகை் கூறிப்பாகக் க□டிய அளவு கவாந்திருக்கின்றது. பூலித் தோலை உரித்தவா் சிங்கத்தின் தோலை உரித்தவா் பாேன்ற பூராணக் கூறிப்புகள் ஆங்காங்கே இடம்பறெ்றிருந்தாலும் யானயைை உரித்த தொன்மக் கதயைை மிகுதியாக எடுத்துரைகை்கிறாா்.

“.....உமயைஞ்சுதல் பொருட்டால்
பிளிறுக் கூரல் மதவாரணம் வதனம் பிடித்து உரித்து”[12]

“அரிவை அவள் வரெுவ,
பொருவெங்கரி படவனெ்று, அதன் அரிவை உடல் அணிவாேன்”[13]

“வண்டு சாே் கூழலி மலமைகள் நடுங்க வாரணம் உரிசயெ்து பாேர்தார்”[14]

பாேன்றவை அப்பாடல் வரிகளுள் சில. இப்பாடல்வரிகளின் ம□லம் சிவன் யானயைின் தாேளை உரித்தது உணர்த்தப்படுகிறது.

நான்முகனை நாேக்கித் தவமியற்றுகிறான் கயாகரன். சிவனதை் தவிர பிறரால் அவனுக்கு இறப்பு நிகழாது என்று வரமளிக்கிறான் நான்முகன். வரம்பறெ்று கயாகரன் தவாே்களை எல்லாம் வருத்துகிறான். மானிடா்களை அழிக்கிறான். தவயாேகியா் காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதராகிய சிவனயைே எதிர்க்கிறான். அவனது சிரத்தை ஓருகாலால் மிதித்து மற்றொரு காலால் தொடயைை மிதித்து அவன் முதுகபை் பிளந்து அவனது தாேலயைுரித்துப் பாேர்வயைாகப் பாேர்த்திக் கொள்கிறான் சிவன். பின்னா் அவன் பணிய அவனுக்கு அருள் சயெ்கிறான். இக்கதை கந்தபுராணம் ததீ சி உத்தரப்படலத்தில் (128-153) இடம்பறெுகிறது. இத்தொன்மத்தால் சிவனை

எதிர்ப்பவர்களுக்கு சிவன் எத்தகையை கொடிய தண்டனையை வழங்குவான் என்பதை விளக்க முடிகிறது. திருஞானசம்பந்தர் இத்தொன்மத்தை எடுத்துரைக்கும் இடங்களிலெல்லாம் 'உமையவள் அஞ்சு' 'உமையவள் நடுங்க' என்பதனையும் சுட்டுத்தே கூறுகிறார்.

தமிழ் தொல்குடி வழிபாட்டு மரபில் இடம்பெற்ற கொற்றவையே பின்னாளில் வதைீ கத்தில் சிவனின் மனைவியாக ஆக்கப்பட்டாள் என்பதைப் பல ஆய்வாளர்கள் விளக்கியிருக்கின்றனர். கொற்றவை பராக்கிரமம் பொருந்திய பெருஞ்சக்தியாக, ஆற்றல்மிக்கவளாக, தமிழர் வழிபாட்டில் இடம்பெற்றிருப்பதைச் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. வதைீ கத் தொன்மங்கள், புராணங்கள் போன்றவை தமிழ் அரசர்களின் வீ ரதீ ரச் செயல்களைச் சிறப்பிக்கவும் தமிழ்த் தெய்வங்களின் பராக்கிரமங்களை விளக்கவுமே பயன்பட்டன. அவ்வாறே யானதை் தோலை உரித்துப் போர்த்திய புராணம் சிலப்பதிகாரத்தில் கொற்றவைக்கு ஏற்றி உரைக்கப்படுகிறது.

"வளையுடைகை் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து"[16]

இப்பாடல் சிவனுக்குரியனவற்றை அப்படியே கொற்றவைக்கும் ஏற்றிக் கூறப்படுகிறது. தாய்த்தெய்வ வழிபாட்டையுடையை சாக்த நெறியினர் சிவனுக்கு நிகரான சக்தியாகவே உமையைப் போற்றுவர். இவ்வாறிருக்க திருஞானசம்பந்தர் மறேக்கண்ட பாடல்களில் 'உமையஞ்சுதல் பொருட்டால்', 'அரிவையைவள் வெரூவ', 'மலைமகள் நடுங்க' என உமையின் ஆற்றலைக் கூறதை்து இயல்பான கூடும்ப வாழ்க்கைக்குரிய பெண்ணாகக் காட்சிப்படுத்துகின்றார். தந்தையாதிக்கத்தை உடையை வதைீ கம் தாய்வழித் தெய்வங்களதை் தாழ்த்தி அவற்றை தந்தையாதிக்க மரபிற்குள் ஏற்றுக் கொண்டது என்பதைச் சமய அறிஞர்கள் விளக்குகின்றனர். திருஞானசம்பந்தர் பாடல்களில் இடம்பெறும் யானையை உரித்த தொன்மம் அவரின் தந்தையாதிக்க வதைீ க சிந்தனையையும் கருத்தியல் மலோண்மையையும் சுட்டுவதாக உள்ளது.

திருஞானசம்பந்தர் பாடலில் அந்தகனைக் கொல்லுதல், சலந்திரனைக் கொல்லுதல், பிரம்மனின் சிரங்களில் ஒன்றையறுத்தல் போன்ற தொன்மங்கள் பெருமளவில் இடம்பெறவில்லை. பிரம்மனின் சிரசசை் சிவபெருமான் அறுத்த நிகழ்வு அந்தணரான திpருஞானசம்பந்தரைக் கவரவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. சிவன் கையிலிருக்கும் பிரம்ம கபாலத்தைப் பல இடங்களில் பெருமைப்பட உரைக்கிறார்.

"மலர்வளர் மறையைவன் வழி வழுவிய சிரமது"[17]

எனப் பல பாடல்களில் பிரம்ம கபாலத்தின் பெருமை பேசப்படுகிறது. எனினும் சிரம் அறுத்த தொன்மம் சில இடங்களிலே பயின்று வருகிறது. அதிக முக்கியத்துவத்தைப் பெறவில்லை. அந்தகனைக் கொல்லுதல், சலந்திரனைக் கொல்லுதல் போன்ற தொன்ம நிகழ்வுகள் அதிகம் இடம் பெறாததற்கு அக்கதைகள் அக்காலத்தில் மக்களிடத்தில் பரவலாகச் செல்வாக்குப் பெறவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆலின் கீ ழிருந்து அறமுரைத்த தொன்மம்

தமிழ் வழிபட்ட சிவன் ஆரிய மரபிலிருந்து வந்ததல்ல சிந்துவெளிப் பண்பாட்டில் உதித்த ஆரியரல்லாத மரபினர் வழிவந்த சிவனே ஆவான். தமிழர் சிவனை ஆலமர் செல்வனாக,

Written by - ர.சுரேஷ், உதவிப் பேராசிரியர், கற்பகம் உயர் கல்வி கலைக் கழகம், கோயம்புத்தூர் -
Friday, 06 September 2019 07:01 - Last Updated Friday, 06 September 2019 07:08

ஆலின் கீழிருந்து அறம் உரைத்த பரமயோகியாக எண்ணியே வழிபட்டனர். இத்தொன்மத்தை திருஞானசம்பந்தர் பாடல்களில் பரவலாகக் காண முடிகிறது. இத்தொன்மத்தின் வழி திருஞானசம்பந்தர் தம் வதைகளை மலோணமையையும் நுட்பமாக நுழைத்துவிடுகிறார். தமிழர் சிவபெருமான் ஆலின் கீழிருந்து அறமுரைத்ததாகக் கூற திருஞானசம்பந்தர் அதோடு சோத்துநான்கு மறைகளையும் உரைத்தாகக் கூறிப்பிடுகின்றார்.

தமிழர் கூறும் அறம் என்பதற்கும் வதை வதைகளம் கூறிப்பிடும் தர்மம் என்பதற்கும் பெரும்த வேறுபாடு உண்டு. திருஞானசம்பந்தர் இவை இரண்டையும் ஒருங்கிணைக்கிறார். இவ்வொருங்கிணைப்பு முயற்சிக்கு தமிழர் தொன்மத்தையே பயன்படுத்திக் கொள்கிறார். வேறுபாடுகளும், விலகல்களும் கொண்ட இரு மரபுகளை ஒருங்கிணைப்பதின் சமய அரசியல் அதற்குள்ளான முரண்பாட்டை அழித்து ஒன்றை மட்டுமே மையப்படுத்தும் போக்கினை நிலவச் செய்கிறது. இரண்டில் வதைகளமே மலோணமை இடத்தை அடைகிறது.

“அறநெறி மறையொடும் அருளிய பரனை” 18

“வாய் மறைத்திறம் அறத்தொழுதி கண்டு”[19]

எனவரும் பாடல்கள் சிவனை ஆலமர்ந்து அறமும் வதேமும் ஓருங்கே உரைத்ததாகக் கூறுகிறது. இத்தொன்மத்தை வதைகதத்திற்குச் சார்பாக பயன்படுத்துகிறார். சிவன் அறத்தையும் வதேத்தையும் ஓருங்கயேுரைத்ததாகப் பூனகைகிறார். தமிழ் அறம் என்பதும் வதைகளை தர்மம் என்பதும் வேறு வேறானவை. இவை இரண்டையும் ஓருங்குரைத்ததாகக் கூறுவது அதற்குள்ளான முரண்பாட்டை மறைத்து ஒன்றை மட்டுமே மையப்படுத்தும் முயற்சியாகும்.

இவ்வாறான தொன்மங்களே திருஞானசம்பந்தர் பாடல்களில் மிகுதியாக இடம்பெறுகின்றன. இதன்மூலம் அவர்தம் வதைகளை மலோணமகை கருத்தியலை வளிப்படுத்தியுள்ளார் என்பதை மறேக்கண்ட கருத்துகள் தளிவுபடுத்துகின்றன.

சிவனின் அட்டவீரச் செயல்களும் அச்சம் அருள் எனும் இரட்டைப் பண்புகளை வளிப்படுத்துவதகை காணமுடிகிறது. இவை பெரும்பாலும் சிவனின் அருட்கோலத்தவிட அகோரக் கோலங்களுக்கே முதன்மையளிப்பதாய் உள்ளன. சமண, பௌத்தர்களை எதிர்க்கவும், தமிழ்த் தெய்வங்களை விளிம்பு நிலகைக்குத் தள்ளும் இத்தொன்மங்கள் சிறப்பான முறையில் திருஞானசம்பந்தரால் கையாளப்பட்டுள்ளன.

□□□□□□□□□ □□□□□□□□□:

1. சம்பந்தர், திவலிதாயம், 50:5.
2. மலேதா, திருமாற்பேறு, 114:5.
3. மலேதா., திருசோபுரம், 51:5.
4. மலேதா., திருபுள்ளமங்கை, 16:1.
5. மலேதா., சீகாழி, 24:4.
6. மலேதா., திருகோலிக்கன், 23:9.
7. மலேதா., திருஅயிலுறு, 79:7.
8. க. கோதண்டராமன், வதேநறியும் சவைத்துறையும், ப.70.
9. மலேதா., ப.64.

10. மலேதா., ப.66.
11. பாறநானூறு, பா.195.
12. சம்பந்தர், மு.சு.ந□., 62:3.
13. மலேதா., திருஅண்ணாமலை, 10:8.
14. மலேதா., திருவயலூர், 13:1.
15. திருப்பாம்புரம், 41:10.
16. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வடேட்டுவவரி, பா.54,56
17. மலேதா., திருவீழிமிழலை, 20:8.
18. மலேதா., 20:5.
19. மலேதா., திருஅன்பிலாலந்துறை, 33:3.

□□□□□□□□□ □□□□□□□□

1. கோபாலையர் டி.வி., (ப.ஆ.),ஞானசம்பந்தர் தவோரம், பண்முறைத் தொகுப்பு, பிரஞ்சு ஆய்வு நிறுவன வெளியீடு,புதுச்சேரி.1984.
2. கோதண்டராமன் சு.,வதேநெறியும் சைவத் துறையும், டி.எஸ். புத்தக மாளிகை, சென்னை. 2009.
3. சிலப்பதிகாரம்,ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை,சைவசித்தாந்த நூற்பதிப்பு கழக வெளியீடு,சென்னை.1959.
4. ஓஷை. சு. துரைசாமிப்பிள்ளை, பாறநானூறு மூலமும் உரையும், தமிழ்மண் அறக்கட்டளை ,சென்னை.2008.

asareri@gmail.com